எப்போதும் ஒவ்வொரு ஆணும் எங்கள் கோரதர், ஒவ்வொரு பெண்ணும் எங்கள் சகோதரி

(மனித கோதரத்துவத்துவ அறிவிப்பு)







**இன்றைய இறைவார்த்தை:**

யோபு 7: 1-4, 6-7

திருப்பாடல்: 147: 1-6

1 கொரிந்தியர் 9:16-19, 22-23

மாற்கு 1: 29-39

INTERNAL CIRCULATION ONLY
BUL 05/2024

இதன் தொடர்ச்சியாக, இன்றைய நற்செய்தி வாசகம் கடவுளின் மகனாகிய இயேசுவுக்கும், மக்களுக்கும் இடையே இருக்கும் சகோதரத்துவத்தை சில எடுத்துக்காட்டுகளின் வழியாக நமக்குக் காட்டுகிறது. இயேசு பேதுருவின் மாமியாரைச் சந்தித்து அவரைக் குணப்படுத்துகிறார். அவரும் தன் நோயிலிருந்து குணம் பெற்று, உடனடியாக இயேசுவுக்கும் சீடர்களுக்கும் பணி செய்கிறார். நோயுற்றவர்களையும் அல்லது பேய்பிடித்தவர்களையும் இயேசுவிடம் கொண்டுவருவதன் மூலம் மக்களும் தங்களுடைய மனித சகோதரத்துவத்தின் உணர்வை வெளிப்படுத்துகிறார்கள். இயேசுவும் திரளான கூட்டமும், நோயாளிகளும் இருந்தபோதிலும், பலரையும் குணப்படுத்தி, அசுத்த ஆவிகளையும் விரட்டுகிறார்.

மக்கள் எல்லோரும் அவரைத் தேடுவதால் அங்கேயே அவர் தங்கியிருக்கலாம். இயேசு அந்த வசதியான இடத்திலேயே தங்கிவிடாமல், மற்ற ஊர்களில் உள்ள மக்களுக்கும் மீட்பின் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்பதற்காக அந்த இடத்தை விட்டு பயணிக்கிறார். கடவுளின் அன்பைப் பகிர்ந்துகொள்வதற்கான அவரது பணி ஒரு குறிப்பிட்ட இடத்திலோ அல்லது குறிப்பிட்ட மக்களின் கூட்டத்திலோ கட்டுப்படுத்தி விடக்கூடாது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். கடவுளின் அன்புக்கும் இரக்கத்திற்கு எல்லை இல்லை. அதே போல நேரம், காலம், இடம், சமயம், கலாச்சார மற்றும் சமூகம் பொருளாதார நிலைகளாலும் அவை வரையறுக்கப்படவில்லை.

நமது சொந்த, இனம், சமயம், கலாச்சாரம், சமூகம் அல்லது பொருளாதார குழுக்களுக்குள் நாம் வாழ்வது, நமக்கு ஏற்ற வசதியாக இருந்தாலும், இவற்றையும் தாண்டி, நாம் கடவுளின் அன்பை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளவும், நமது குடும்பத்தில், சுற்றுப்புறத்தில் மற்றும் சமூகத்தில் மனித சகோதரத்துவ உணர்வை உருவாக்கவும் இயேசு நம்மை அழைக்கிறார். மனித சகோதரத்துவத்தின் மூன்றாவது அனைத்துலக தினத்தன்று (2023) திருத்தந்தை பிரான்சிஸ் தமது செய்தியில் இவ்வாறு நினைவூட்டுகிறார். வெவ்வேறு சமயங்களைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பிண்ணிப்பிணைந்த சாலைகளில் கடவுளை நோக்கி நடக்கிறார்கள். **ஒவ்வொரு ந்திப்பிலும், ஒருவரையொருவர் எதிர்ப்பதற்கு அல்ல, மாறாக கடவுளின் உதவியால் ஒருவரையொருவர் சகோதர சகோதரிகளாக முன்னோக்கிச் செல்ல ஊக்குவிக்கும் ஒரு வாய்ப்பாக அது அமையும்.**

உங்களின் கவனத்திற்கு: லுமென் ஜென்டியம் Lumen Gentium என்ற ஆவணத்தின் விளக்கம் சில சூழ்நிலைகளின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

*Published by:* Archdiocesan Pastoral Institute (API) | *Email:* api@archkl.org

4 பிப்ரவரி 2024
பொதுக்காலம் ஆண்டின் 5 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

மனித கோதரத்துவத்தைக் கொண்டாடுதல்

# “சகோதர சகோதரிகளாக முன்னேறுங்கள்”

பிப்ரவரி 4 ஆம் தேதி, ஐக்கிய நாடுகளின் சபை அனைத்துலக மனிதசகோதரத்துவ நாளைக் கொண்டாடுகிறது. இது ஆண்டுதோறும் பிப்ரவரி 1-7 வரை நடைபெறும் உலக சமய நல்லிணக்க வாரத்துடன் இணைந்துள்ளது. இது உலகளாவிய சமய நல்லிணக்கத்தின் கொண்டாட்டத்தோடும் தொடர்புடையது. மோதல்கள், சச்சரவுகள் போன்றவை, துன்பத்தையும், மரணத்தையும் விளைவித்துக் கொண்டிருக்கும் இந்த உலகில், மனித சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவது மிகவும் உடனடித் தேவையாக உள்ளது.

